பிரஸார் பாரதி

அகில இந்திய வானொலி, சென்னை - 4

**25 06 2026 THURSDAY 6.30 PM**

**மாநிலச்செய்திகள்**

**தலைப்புச் செய்திகள்**

**1)** நெய்வேலி பழுப்பு நிலக்கரி நிறுவனத்தில் மத்திய அரசின் பங்குகளை விற்பனை செய்ய முடிவு செய்திருப்பதை மறு பரிசீலனை செய்ய வேண்டும் என, பிரதமர் திரு நரேந்திர மோடியை, முதலமைச்சர் திரு விஜய் வலியுறுத்தியுள்ளார்.

**2)** மத்திய அரசுடன் இணக்கமாக செயல்படும் என்று தமிழக அரசு கூறியுள்ளது வரவேற்கத்தக்கது என்று நிதியமைச்சர் திருமதி நிர்மலா சீதாராமன் தெரிவித்துள்ளார்.

**3)** பொதுமக்களுக்கு இடையூறாக இருக்கும் டாஸ்மாக் கடைகள் அகற்றப்படும் என்று மாநில அமைச்சர் திரு விக்னேஷ் கூறியுள்ளார்.

**4)** சென்னை, செங்கல்பட்டு, உள்ளிட்ட பல்வேறு மாவட்டங்களில் அடுத்த இரு தினங்களுக்கு மிதமான மழை பெய்ய வாய்ப்புள்ளதாக வானிலை ஆய்வு மையம் தெரிவித்துள்ளது.

**5)** அமெரிக்க ஓபன் பேட்மிண்டன் போட்டியில் இந்தியாவின் **Dhruv Rawat — Maneesha** இணை காலிறுதிக்கு முந்தைய சுற்றுக்கு முன்னேறியுள்ளது.

. . இனி விரிவான செய்திகள் . . .

<<<<<<<<<<>>>>>>

நெய்வேலி பழுப்பு நிலக்கரி நிறுவனத்தில் மத்திய அரசின் பங்குகளை விற்பனை செய்ய முடிவு செய்திருப்பதை மறு பரிசீலனை

செய்ய வேண்டும் என பிரதமர் திரு நரேந்திர மோடியை, முதலமைச்சர் திரு விஜய் வலியுறுத்தியுள்ளார்.

இதுதொடர்பாக, பிரதமருக்கு அவர் இன்று எழுதியுள்ள கடிதத்தில், நெய்வேலி பழுப்பு நிலக்கரி நிறுவனம் என் எல் சி-யின் மூன்று சதவீதம் வரையிலான பங்குகளை விற்பனை செய்வதற்கு மத்திய அரசு எடுத்துள்ள முடிவு குறித்து மாநில அரசின் வருத்தத்தை தெரிவிப்பதாக கூறியுள்ளார்.

என் எல் சி நிறுவனத்தில் மத்திய அரசின் பங்குகளை மேலும் குறைக்கும் எந்தவொரு முடிவையும் தமிழக அரசு கொள்கை ரீதியாக எதிர்ப்பதாக அவர் தெரிவித்துள்ளார்.

எரிசக்தி பாதுகாப்பு, கனிமவள மேம்பாடு, முக்கிய உள்கட்டமைப்பு ஆகியவற்றில் என்எல்சி நிறுவனம் முக்கியத்துவம் வாய்ந்த தேசிய சொத்து என்பதில் தமிழக அரசு உறுதியாக உள்ளது என்று அவர் கூறியுள்ளார்.

மத்திய அரசின் பங்குகளை குறைத்தால் இதுபோன்ற முக்கியத்துவம் வாய்ந்த பொதுத்துறை நிறுவனங்களின் பொதுவுடமை தன்மைக்கு தவறான முன்னுதாரணத்தை ஏற்படுத்தும் என்றும் அவர் தெரிவித்துள்ளார்.

இத்தகைய நடவடிக்கை நிதி சார்ந்த அம்சங்களை கடந்து மாநில மக்களின் நீண்டகால நலன்கள் நாட்டின எரிசக்தி பாதுகாப்பு ஆகியவற்றை பாதிப்பதாக அமையும் என்றும் அவர் கூறியுள்ளார்.

என்எல்சி நிறுவனத்தில் மத்திய அரசின் பங்குகள் குறைக்கப்படக் கூடாது என்பதில் தமிழக அரசு தொடர்ந்து உறுதியாக இருந்து வருகிறது என்று அவர் தெரிவித்துள்ளார்.

இத்தகைய நிறுவனங்கள் முழுமையாக அரசின் உரிமையிலும், கட்டுப்பாட்டிலும் மட்டுமே நீடிக்க வேண்டும் என்றும் அவர் வலியுறுத்தியுள்ளார்.

தமிழக அரசின் எண்ணங்களையும், கொள்கை ரீதியிலான ஆட்சேபனைகளையும் மத்திய அரசு பரிசீலிக்கும் என்று தாம் நம்புவதாக திரு விஜய் தெரிவித்துள்ளார்.

<<<<<<<<<>>>>>>

மத்திய அரசுடன், தமிழக அரசு இணக்கமாக செயல்படும் என்று கூறியுள்ளது வரவேற்கத்தக்கது என்று நிதியமைச்சர் திருமதி நிர்மலா சீதாராமன் தெரிவித்துள்ளார்.

காஞ்சிபுரத்தில் இன்று செய்தியாளர்களிடம் பேசிய அவர், தமிழகத்திற்கு வழங்க வேண்டிய நிதி உள்ளிட்ட அனைத்து உதவிகளும் கட்டாயம் வழங்கப்படும் என்று கூறினார்.

*(Sound Byte — நிர்மலா சீதாராமன் - 55 Sec.)*

<<<<<<<<<>>>>>>

பிரதமர் திரு நரேந்திர மோடி தலைமையிலான மத்திய அரசின் திட்டங்களை பொதுமக்களிடம் கொண்டு செல்ல வேண்டும் என்று தகவல் ஒலிபரப்புத்துறை இணையமைச்சர் டாக்டர் எல். முருகன் வலியுறுத்தியுள்ளார்.

செங்கல்பட்டு மாவட்டத்தில் கட்சி நிர்வாகிகளிடையே உரையாற்றியபின் சமூக வலைதளத்தில் அவர் வெளியிட்டுள்ள பதிவில், அரசின் சாதனைகள் குறித்து பொதுமக்களிடம் வலுவாக சென்று சேர்க்கும் வகையில் ஒருங்கிணைந்து செயல்பட வேண்டும் என்று கேட்டுக்கொண்டுள்ளார்.

<<<<<<<<<>>>>>>

பொதுமக்களுக்கு இடையூறாக இருக்கும் டாஸ்மாக் கடைகள் அகற்றப்படும் என்று மாநில அமைச்சர் திரு விக்னேஷ் தெரிவித்துள்ளார்.

திண்டுக்கல் மாவட்டம் பழனியில் இன்று செய்தியாளர்களிடம் பேசிய அவர், இதற்காக தமிழகம் முழுவதும் உள்ள டாஸ்மாக் கடைகளின் பட்டியல் மீண்டும் மறு ஆய்வு செய்யப்பட்டு வருவதாக கூறினார்.

டாஸ்மாக் நிர்வாகத்தை முறைப்படுத்துவது மற்றும் கடைகளை ஒழுங்குபடுத்துவது தொடர்பாக புதிய சட்ட வரைவு தயார் செய்யப்பட்டு வருவதாகவும் திரு விக்னேஷ் தெரிவித்தார்.

<<<<<<<<<>>>>>>

தமிழகத்தில் குற்றங்களை கட்டுக்குள் கொண்டுவர தேவையான நடவடிக்கையை அரசு மேற்கொள்ள வேண்டும் என்று பிஜேபி மாநிலத் தலைவர் திரு நயினார் நாகேந்திரன் வலியுறுத்தியுள்ளார்.

இதுதொடர்பாக அவர் வெளியிட்டுள்ள சமூக வலைதள பதிவில், கடந்த ஒருமாத காலமாக தமிழகத்தில் பெண்கள் மற்றும் குழந்தைகளுக்கு எதிராக நடைபெறும் பாலியல் வன்கொடுமைகள் பொதுமக்களை அச்சமடைய செய்துள்ளதாக கூறியுள்ளார்.

சட்டம் — ஒழுங்கை சரி செய்ய சமரசமின்றி நடவடிக்கை எடுக்க வேண்டும் என்றும் திரு நயினார் நாகேந்திரன் கேட்டுக்கொண்டுள்ளார்.

<<<<<<<<<>>>>>>

சென்னை எழும்பூர் — வேளாங்கண்ணி விரைவு ரயில் அடுத்த மாதம் ஒன்றாம் தேதியிலிருந்து தாம்பரத்திற்குபதிலாக, சென்னை எழும்பூரிலிருந்து புறப்படும் என்று தெற்கு ரயில்வே அறிவித்துள்ளது.

சென்னை எழும்பூரிலிருந்து இரவு ஒன்பது மணிக்கு இந்த ரயில், புறப்படும்.

இம்மாதம் **30-**ஆம் தேதி வேளாங்கண்ணியிலிருந்து வரும் ரயில், தாம்பரத்திற்கு பதிலாக சென்னை எழும்பூர் வரை இயக்கப்படும் என்றும் அறிவிக்கப்பட்டுள்ளது.

<<<<<<<<<<>>>>>>

சென்னை, செங்கல்பட்டு, உள்ளிட்ட பல்வேறு மாவட்டங்களில் அடுத்த இரு தினங்களுக்கு மிதமான மழை பெய்ய வாய்ப்புள்ளதாக வானிலை ஆய்வு மையத்தின் தென் மண்டல இயக்குநர் டாக்டர் வி ஆர் துரை தெரிவித்துள்ளார்.

எமது செய்தியாளரிடம் பேசிய அவர் இவ்வாறு தெரிவித்தார்.

***(Sound Byte — வி ஆர் துரை — 41 Sec. )***

<<<<<<<<<<>>>>>>

*மாவட்டச் செய்திகள்*

தருமபுரி மாவட்டத்தில் நடைபெற்றுவரும் வளர்ச்சித் திட்டப்பணிகள் குறித்து மாநில அமைச்சர் திரு ராஜ்குமார் தலைமையில் ஆய்வுக்கூட்டம் இன்று நடைபெற்றது.

---------------

சென்னை மயிலாப்பூரில் இலவச மருத்துவ முகாம் மற்றும் கல்வி ஊக்குவிப்பு நிகழ்ச்சியினை மாநில உணவு அமைச்சர் திரு வெங்கடரமணன் இன்று தொடங்கிவைத்தார்.

------------------

மதுரை சாத்தமங்கலத்தில் ஐந்து கோடி ரூபாய் மதிப்பீட்டில் கட்டப்பட்டுவரும் கல்லூரி மாணவர் விடுதியை மாநில அமைச்சர் திரு சம்பத்குமார் இன்று ஆய்வு செய்தார்.

--------------

நாமக்கல் மாவட்டம் ராசிபாளையம் மற்றும் செங்கப்பள்ளி ஊராட்சிகளில் நிதியியல் கல்வி விழிப்புணர்வு நிகழ்ச்சி இன்று நடைபெற்றது.

--------------------

திருப்பத்தூர் மாவட்ட ஆட்சியர் அலுவலக வளாகத்தில், போதை பொருள் ஒழிப்பு தினத்தை முன்னிட்டு கல்லூரி மாணவர்கள் பங்கேற்ற விழிப்புணர்வு பேரணியை ஆட்சியர் திரு ரவிகுமார் தொடங்கிவைத்தார்.

--------------

திருவண்ணாமலை மாவட்டம் வந்தவாசியில் போதைப்பொருள் ஒழிப்பு விழிப்புணர்வு பேரணி இன்று நடைபெற்றது.

-------------

தூத்துக்குடி மாவட்டத்தில் விவசாயிகள் குறைதீர் நாள் கூட்டம் ஆட்சியர் திரு விஷூ மகாஜன் தலைமையில் இன்று நடைபெற்றது.

-------------------

கடலூர் மாவட்ட அரசு தலைமை மருத்துவமனையில் பெண் குழந்தைகளை காப்போம் — பெண் குழந்தைகளுக்கு கற்பிப்போம் திட்டத்தின்கீழ் விழிப்புணர்வு நிகழ்ச்சி ஆட்சியர் திரு சிபி ஆதித்யா செந்தில்குமார் தலைமையில் நடைபெற்றது.

---------------

நெல்லை மாவட்டம் நாங்குநேரி அருகே சுமார் **5** கோடி ரூபாய் மதிப்பிலான போதைப்பொருட்களை காவல்துறையினர் தீயிட்டு அழித்தனர்.

--------------

சென்னை மெரினா கடற்கரைப் பகுதியில் மாநராட்சி ஆணையர் திரு சமீரன் இன்று மரக்கன்று நட்டார்.

<<<<<<<<<<>>>>>>

*விளையாட்டுச் செய்திகள்*

அமெரிக்க ஓபன் பேட்மிண்டன் போட்டியில் இந்தியாவின் **Dhruv Rawat — Maneesha** இணை காலிறுதிக்கு முந்தைய சுற்றுக்கு முன்னேறியுள்ளது.

கலப்பு இரட்டையர் பிரிவு முதல் சுற்று ஆட்டத்தில் இந்த இணை, **21-15, 21-16** என்ற செட் கணக்கில், இந்தோனேஷியாவின் **Wirawan Adam — Serena Kani** இணை-ஐ வென்றது.

------------

ஸ்பெயினில் நடைபெற்றுவரும் சர்வதேச மகளிர் டென்னிஸ் போட்டியில் இந்தியாவின் வைஷ்ணவி அட்கர் — பிரார்த்தனா **Thombare** இணை மற்றும் ருதுஜா போஸ்லே — சீனாவின் **Fangran Tian** இணை அரையிறுதிக்கு முன்னேறியுள்ளன.

-----------

பல்கேரியாவில் நடைபெற்றுவரும் சர்வதேச சேலஞ்சர் டென்னிஸ் போட்டியில் இந்தியாவின் பிரஜ்வால் தேவ் — நிதின்குமார் சின்ஹா இணை அரையிறுதிக்கு முன்னேறியுள்ளது.

---

உலகக்கோப்பை மகளிர் டுவென்டி — டுவென்டி கிரிக்கெட் போட்டியில் இந்தியா இன்று பங்களாதேஷை எதிர்கொள்கிறது.

மான்செஸ்டரில் நடைபெறவுள்ள இப்போட்டி இரவு 7 மணிக்கு தொடங்குகிறது.

**<<<<<<<<<END>>>>>>>**